

ஆண்டறிக்கை

2017

ஹோமியோபதி மருத்துவ சபை

சுகாதார , போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

பொருளடக்கம்

பக்கம்

1. சுருக்கம் 02

2. முகவுரை 03

3. ஹோமியோபதி மருத்துவ சபை 04

4. பின்புல விபரங்கள் 05

5. மருத்துவ சபையின் நோக்கம் 07

6. மருத்துவ சபையின் அதிகாரங்கள் 08

7. மருத்துவ சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம் 10

8. நிறுவனத்தின் தகவல்கள் 11

9. மருத்துவ சபையின் செயற்பாட்டுத்திட்டம் - 2017 12

10. ஹோமியோபதி வைத்திய சபையின் செயலாற்றுகை 14

11. வருடாந்த நிதி அறிக்கை 24

12. கணக்காய்வு அறிக்கை

நல்வாழ்த்துக்கள்

01. சுருக்கம்

கடந்த வருடத்தைப் போலவே இவ்வருடமும், வைத்திய சபையின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி என்பவற்றுக்கு அமைவாக வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடு செய்வதற்கு அவசியமான அடிப்படையைப் பெற்றுக்கொள்வதற்கு வருடத்திற்கான செயற்பாடுகளை உள்ளடக்கிய 2017 ஆம் ஆண்டு அறிக்கை இதனூடாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ்வருடம் ஹோமியோபதி வைத்திய சபையின் நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டு 10ம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது நிர்வாக சபையான இடைக்கால வைத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்டது. சபையின் நிதி நடவடிக்கைகள் சுகாதார அமைச்சான சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் உள்ள சுதேச வைத்தியப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஆம் ஆண்டு 10 இம் இலக்க புதிய சட்டத்தை அமுல்படுத்தவதற்கு அவசியமான ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல் தொடர்பான பிரதான பொறுப்பாக எடுத்துக்கொண்ட இடைக்கால வைத்தியசபையின் கௌரவ அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட கட்டளை வரைவினை சமர்ப்பிப்பதற்கு முதலில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது, புதிய சட்டத்தின் கீழ் ஹோமியோபதி வைத்திய சபையினை நிறுவுவதற்காக கட்டளை, ஹோமியோபதி வைத்தியர்கள், துணை மருத்துவ வல்லுனர்கள், சிகிச்சை வைத்திய மத்தியநிலையங்கள் மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் ஹோமியோபதி நிறுவனங்களின் பதிவு மற்றும் அவ்வாறான பதிவினை புதுப்பிப்பதற்கான கட்டளை வரைவு தயாரிக்கப்பட்டது. அதேபோல் சட்டத்தின் 30வது பந்தியின் படி பேணப்பட வேண்டிய ஹோமியோபதி வைத்திய தொழில் புரிபவர்களை பதிவு செய்வதற்கான பரீட்சையை நடாத்துவதற்கான ஒழுங்குவிதிகள் இவ்வருடத்தினுள் பூர்த்திசெய்யப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 2016 ஆம் ஆண்டு 10ம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் முதலாவது தொழிற்படுத்தல் சபையான ஹோமியோபதி இடைக்கால வைத்திய சபைக்கு சாட்டப்பட்டிருந்த பணிகள் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட ஆண்டாக இந்த வருடத்தினைக் குறிப்பிட முடியும்.

வைத்திய சபையினால் பேணப்படும் 7 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களில் காணப்படும் 7 அலுவலக உதவியாளர்களுக்கான வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்ததன் ஊடக நிறுவனத்தின் கட்டமைப்பை பலமூட்டி விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ் 7 சிகிச்சை நிலையங்களின் ஊடாக வழங்கப்படும் சிகிச்சைகளின் தரம் மற்றும் அளவானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக் காணப்பட்டது. ஹோமியோபதி பட்டதாரிகள் நால்வர் (4) பதிவு செய்ததன் ஊடாக இதுவரை வைத்தியசபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த வைத்தியர்களின் எண்ணிக்கை 281 ஆக அதிகரித்தது. சட்டத்தின் 30 (1)ம் பந்திக்கு அமைவாக வைத்திய தொழில்புரிபவர்களை பதிவு செய்வதற்கான பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் 185 விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெற்றன. இவ்வாறாக, வைத்திய சபையின் ஒட்டுமொத்த பணிகள் தொடர்பாகவும், நிறுவனத்தை நடாத்துவது தொடர்பான நிர்வாக மற்றும் நிதி செயற்பாடுகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டது.

02. முகவுரை

“சமனான ஒன்றால் சமனான ஒன்றை அழித்தல்” எனும் இயற்கையான நியதிக்கு அமைவாக கட்டியெழுப்பப்பட்ட மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையினைக் குறிப்பிட முடியும். 18 ஆம் நூற்றாண்டில் இந்த மருத்துவ முறையானது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேற்கத்திய வைத்திய நிபுணரான கிருஸ்டின் பெட்ரிக் சாமுவெல் ஹானிமன் என்பவரினால் ஆகும். இன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து வளர்ச்சியுரும் ஹோமியோபதி வைத்திய முறையை பொதுமக்கள் சுகாதார சேவையினுள் முக்கியம் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி, இந்திய அரசு ஹோமியோபதி வைத்திய முறை தேசிய வைத்திய சேவையுடன் இணைத்து, நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் மற்றம் வைத்தியசாலைகள் மூலம் ஹோமியோபதி சிகிச்சையை மக்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஹோமியோபதி வைத்திய பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள், ஹோமியோபதி மருந்துகளை தயாரிக்கும் கைத்தொழிற்சாலை மற்றும் ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றை நிறுவுதல் என்பவற்றின் ஊடாக இந்த விடயம் மிகவும் தெளிவாக்கப்படுகின்றது.

1970 ஆம் ஆண்டு 07ம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் மூலம் முதன்முதலில் இலங்கை ஹோமியோபதி வைத்திய சபை நிறுவப்பட்டதுடன், அது ஹோமியோபதி வைத்திய முறையை இலங்கையினுள் நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை மேற்கொண்டது. எனினும் அதில் எழுந்த சட்ட ரீதியான மற்றும் கட்டமைப்பு தடைகள் காரணமாக வைத்திய சபை வீழ்ச்சியடைந்தது. எனினும், இந்த சவாலை எதிர்நோக்குவதற்காக பாராளுமன்றத்தினால் 2016 ஆம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த புதிய சட்டத்தின் 1 ஆம் பிரிவின் 2ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி வைத்திய சபையை மீண்டும் நிறுவுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக சட்டத்தின் 51ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி வைத்திய சபையின் முதல் கட்டமாக ஹோமியோபதி இடைக்கால வைத்திய சபையொன்று 2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கௌரவ அமைச்சரினால் நிறுவப்பட்ட ஹோமியோபதி இடைக்கால வைத்திய சபையில் 04 ஹோமியோபதி வைத்தியர்களும் 06 அரச அலுவலர்களும் உள்ளடங்கியிருந்தனர். ஹோமியோபதி வைத்திய சபையின் பதிவாளர், இந்த சபையின் செயலாளராவார்.

ஹோமியோபதி வைத்திய சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதன் பணிகளின் கீழ் கொண்டுவரப்பட்ட ஹோமியோபதி வைத்திய முறையை பொது மக்கள் சுகாதார சேவையாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 07 மாவட்டங்களில் 07 ஹோமியோபதி வைத்திய சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் தெஹிவளை, பரகடுவ, மொனராகலை, பாலமுனை, மாத்தளை, குருநாகல் மற்றும் தொலங்கமுவ ஆகும்.

03. ஹோமியோபதி வைத்திய சபை

தொலை நோக்கு

"ஹோமியோபதி வைத்திய முறையினை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல்"

செயற்பணி

"ஹோமியோபதி வைத்திய முறைக்கான மனியவள மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான உரிய கொள்கைகளை வகுத்து, அதனை பொது மக்கள் இடையே பரப்புதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்."

நோக்கம்

2016 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஹோமியோபதி துறையின் தொழில் கல்வி மற்றும் சுகாதார சேவை என்பற்றின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் அறிவு, திறன், அனுபவம் உள்ளவர்களின் ஊடாக நோயாளிகளின் ஆரோக்கியத்தை உருவாக்குதல் மற்றும் ஆரோக்கியமான நபர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு தொழில் அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் தொழிலின் கௌரவம் மற்றும் தரத்தினைப் பாதுகாத்தல்.

04. பின்புல விபரங்கள்

ஹோமியோபதி மருத்துவ சபை நியதிச்சட்ட நிறுவனமாகும். முதல் வைத்திய சபை ஹோமியோபதி இடைக்கால வைத்திய சபையாக 2016 ஆம் ஆண்டின் 10ம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் ஊடாக பெயரிடப்பட்டதுடன், அதன் அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் கௌரவ அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, உத்தியோகபூர்வ அரச அலுவலர்கள் மூவர், ஹோமியோபதி வைத்திய தொழில்புரிபவர்களிடையே தேர்த்தல் வைக்கப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர், ஹோமியோபதி வைத்தியர் இருவர் கட்டாயமாக உள்ளடங்கும் வகையில் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரையும் உள்ளடக்கி 11 நபர்கள் அடங்கிய சபையொன்று அமைக்கப்படும். சட்டத்தின் கொள்கை மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான அதிகாரம் கௌரவ அமைச்சரிடம் உள்ளதுடன், உரிய துறை தொடர்பாக சட்டத்திற்கு அமைவாக ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் அதிகாரம் சபைக்கு சாட்டப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள்

2016 ஆம் ஆண்டின் 10ம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தை அமுல்படுத்தும் திகதியில் அமுலிலிருந்த அனைத்து கட்டளைகளும், இந்தச் சட்டத்தின் கட்டளைகள் தயாரிக்கும் வரை, இந்த சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் எனக் கருதப்படும். புதிய சட்டத்தின் கீழ் அவசியமான ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றதனால், 1970 ஆம் ஆண்டு 07ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் கீழ் செயற்பட்ட அனைத்து கட்டளைகளும் அவ்வாறே செயற்படுத்தப்படும்.

1970 ஆம் ஆண்டு 07ம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்ட கட்டளைகள்

1. ஹோமியோபதி ஒழுங்குவிதிகள் - 1980
(வைத்தியதுறையைச் சேர்ந்தவர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் ஹோமியோபதி மருந்து இறக்குமதி)
2. ஹோமியோபதி வைத்திய சபையின் சட்டம் - 1981
3. ஹோமியோபதி வைத்திய சபையின் தேர்தல் ஒழுங்குவிதிகள் - 1998

ஹோமியோபதி வைத்திய சபையை நிறுவுதல்

இந்த நாட்டில் முதன் முதலில் ஹோமியோபதி வைத்திய சபை, 1970 ஆம் ஆண்டு 07ம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக, 1979 ஆம் ஆண்டு விடயத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சரினால் நிறுவப்பட்டது. 5 வருடங்களுக்கு ஒருமுறை வைத்திய தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் வைக்கப்பட்டு (முதலாவது வைத்திய சபை தவிர்ந்த) நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்தும் வைத்திய சபை நியமிக்கப்படவில்லை. 1979 ஆம் ஆண்டிற்கு பின்னர் இரண்டாவது வைத்திய சபை 1998 ஆம் ஆண்டும் மூன்றாவது வைத்திய சபை 2006 ஆம் ஆண்டும் நியமிக்கப்பட்டதுடன், அதன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் மூன்றாவதாக நியமிக்கப்பட்ட வைத்திய சபை 2009 ஆம் ஆண்டு அதன் காலம்

முடிவடைவதற்கு முன்னர் கலைக்கப்பட்டு அடுத்த இரு வருடங்களுக்கு புதிய சபை நிறுவப்பட்டது.

அதன் உத்தியோகபூர்வ காலம் 2011 ஜனவரி 30ம் திகதி முடிவடைந்தது. அதுவரை காணப்பட்ட ஹோமியோபதி சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி, புதிய சட்டம் கொண்டுவரும் வரை வைத்திய சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் கௌரவ அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரினால் ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. 2011 ஜூன் 16ம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு 10ம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2016 ஜூலை 29ம் திகதி வரை ஹோமியோபதி வைத்திய சபையின் நடவடிக்கைகள் இடைக்கால நிர்வாக சபையினால் நிறுவப்பட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையில் 05 அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்தக்காலம் முழுவதிலும் ஹோமியோபதி வைத்தியர்களின் தொழில்நுட்பக் குழுவின் ஆதாரவு ஹோமியோபதி இடைக்கால நிர்வாகக் குழுவிற்கு வழங்கப்பட்டது.

ஹோமியோபதி இடைக்கால சபை

2016 ஆம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், 2016 ஒக்டோபர் 21ம் திகதி சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் சட்டத்தின் மூலம் அவருக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ஊடாக ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. அச்சட்டத்திற்கு அமைவாக முதலில் நிறுவப்பட்டது ஹோமியோபதி இடைக்கால சபையாகும். இதன் உத்தியோகபூர்வ காலம் இரண்டு வருடங்களாகும். சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான கட்டளைகளை தயாரிப்பதற்கு அவசியமான ஆரம்ப வரைவுகளை தயாரித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் இந்த சபையின் முதற்பணியாக கருதப்படுகின்றது.

05. வைத்திய சபையின் நோக்கம்

2016 ஆம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக ஹோமியோபதி வைத்திய சபையின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமையும்.

(அ) ஹோமியோபதி வைத்தியத் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல்;

(ஆ) ஹோமியோபதி வைத்திய முறைக்கு அமைவாக பொது மக்கள் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சமூகத்தினுள் ஹோமியோபதி வைத்திய முறையை ஊக்குவித்தல்;

(இ) ஹோமியோபதி வைத்திய முறையை கற்கைசெய்தல், ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஹோமியோபதி வைத்தியத் தொழிலில் ஈடுபடுதல், அதனை மேம்படுத்துதல் மற்றும்;

(ஈ) ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவி கொண்டு நடாத்துதல்;

(உ) அரச ஹோமியோபதி வைத்தியசாலைகள் தவிர்ந்த ஹோமியோபதி வைத்திய முறைக்கு அமைவாக சிகிச்சைகளை வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்;

(ஊ) ஹோமியோபதி மருந்து வகைகள், ஔடதங்கள் மற்றும் ஏனையவற்றைத் தயாரித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தலை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்.

06. வைத்திய சபையின் அதிகாரங்கள்

சட்டத்தின் 16ம் பந்திக்கு அமைவாக கீழ்வரும் அதிகாரங்கள் ஹோமியோபதி வைத்திய சபைக்குரியது ஆகும்.

1. ஹோமியோபதி வைத்தியத் தொழில்புரிபவர்கள், ஹோமியோபதி மருந்து கலப்பவர்கள், ஹோமியோபதி தாதிகள் மற்றும் ஹோமியோபதி நிறுவனங்களை பதிவுசெய்தல்;

2. ஹோமியோபதி வைத்திய தொழில்புரிபவர்கள் பெற்றிருக்கும் கல்வித்தகைமைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல்;

3. ஹோமியோபதி வைத்திய தொழில்புரிபவர்களுக்கு தகைமைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அது பற்றிய சான்றிதழை உறுதிப்படுத்திக்கொள்ளல்;

4. ஹோமியோபதி வைத்தியக் கல்லூரி அல்லது நிறுவனத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பரீட்சையாளர்களை நியமித்தல்;

5. ஹோமியோபதி வைத்திய முறைக்கு அமைவாக சிகிச்சை சேவைகளை வழங்குதல் ;

6. ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவுதல், கொண்டு நடாத்துதல் மற்றும் பட்டதாரி கற்கை பாடநெறிகளைத் தயாரித்தல் ;

7. ஹோமியோபதி மருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி;

8. ஹோமியோபதி மருந்தினை விஞ்ஞான ரீதியாக தயாரித்தல் மற்றும் ஊக்குவித்தல்;

9. ஹோமியோபதி வைத்திய வசதிகள், உபகரணங்கள், பாடநெறி மற்றும் பரீட்சைகள் தொடர்பாக குறைந்தபட்ச தரத்தினை குறித்துரைத்தல் மற்றும் பேணுதல்;

10. ஹோமியோபதி விடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கு ஏனைய வசதிகளை வழங்குதல், ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனத்தை மேம்படுத்தல், அவசிய நிறுவனம் மற்றும் நபர்களுக்கு நிதி உதவிகள் அல்லது வேறு உதவிகளை வழங்குதல்;

11. பட்டப்பின் படிப்பு ஹோமியோபதி வைத்திய கல்வி தொடர்பாக வைத்திய கல்விக்கு குறைந்தபட்ச தரத்தினை விதித்தல் மற்றும் பேணுதல்;

12. ஹோமியோபதி வைத்திய முறைக்கு ஏற்றவகையில் பொது மக்கள் சேவையை மேம்படுத்தல்;

13. வைத்திய கல்வி தொடர்பான பட்டம் மற்றும் ஏனைய கல்விகளை வழங்குதல் தொடர்பாக உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணிபுரிதல்;

14. 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக ஹோமியோபதி வைத்தியக் கல்லூரியை நிறுவுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்;

15. சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான குழுக்களை அமைச்சரவை அனுமதியுடன் நிறுவுதல்;

16. அலுவலர்களுக்கு அல்லது குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்குதல்;

17. சபையின் அதிகாரங்கள். பணிகள் மற்றும் செயல்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்;

18. சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல்.

07. வைத்திய சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம்

2016ம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக வைத்திய சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தலைவர் உள்ளடங்களாக 11 ஆகும். உத்தியோபூர்வமாக நியமிக்கப்பட்ட அமைச்சின் சிரேஸ்ட அலுவலர், திறைசேரி அலுவலர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி உள்ளடங்களாக மூன்று அரச அலுவலர்களும், ஹோமியோபதி வைத்திய தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் நடாத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர்கள் கட்டாயமாக உள்ளடங்கும் வகையிலும், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்று நபர்களையும் உள்ளடக்கி 11 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவர். வைத்திய சபையின் செயலாளர் / பதிவாளர் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் நியமிக்கப்படுவார். சபை மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படுவதுடன், பதிவாளர் ஐந்து வருடங்களுக்கு நியமிக்கப்படுவார்.

08. நிறுவனத்தின் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர் : ஹோமியோபதி வைத்திய சபை

முகவரி : இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை, வெலிசறை, றாகம

தொலை பேசி இலக்கம்: 011 2958175

தொலைநகல்: 011 2958175

மின்னஞ்சல்: homosri.mcouncil@gmail.com

கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் நிலை: 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டத்தின் 15,16 மற்றும் 17ஆம் பிரிவுகளுக்கு அமைவாக நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றுடன் ஹோமியோபதி வைத்திய சபை நிறுவப்பட்டுள்ளது.

நிர்வாகக் கட்டமைப்பு : செயலாளர்/ பதிவாளர்

பணிக்குப் பொறுப்பான வைத்தியர்கள்

முகாமைத்துவ உதவியாளர்கள்

மருந்து கலப்பவர்கள்

அலுவலக உதவியாளர்கள்

வங்கி : இலங்கை வங்கி – தப்ரபேன் கிளை, கொழும்பு 01.

கொமர்ஷல் வங்கி – ஜா-எல கிளை

09. வைத்திய சபையின் செயற்பாட்டுத் திட்டம் - 2017

இலக்கு இலக்கம் 01

2016ம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தல்.

உபாயமார்க்கம்

சட்ட ஒழுங்குகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வெளியிடுதல்.

இலக்கு இலக்கம் 02

01. சட்டத்தின் இலக்கம் 30/1 இன் ஏற்பாடுகளின் கீழ் வைத்தியர்களை பதிவுசெய்தல்.

02. ஹோமியோபதி சுகாதார சிகிச்சை சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அவசியமான துணை சுகாதார சேவையாளர்களை பயிற்றுவித்தல்.

03. தொழிலை அங்கீகரித்தல் மற்றும் பதிவுசெய்தல்.

உபாயமார்க்கம்

- விண்ணப்பங்களைக் கோருதல்
- பரீட்சைகள் குழுவை நியமித்தல்
- பரீட்சைகளை நடாத்துதல்.
- பரீட்சையில் சித்தியடைந்தவர்களை பதிவுசெய்தல்.
- துணை சுகாதார ஊழியர்களை பயிற்றுவித்தல்
- தொழிலை அங்கீகரித்தல் மற்றும் பதிவுசெய்தல்.

இலக்கு இலக்கம் 03

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஹோமியோபதி சுகாதார சேவைகளை வழங்கும் நிறுவனங்களை பதிவுசெய்தல்.

உபாயமார்க்கம்

சட்ட ஒழுங்குகள் மற்றும் மூலப்பிரமாணத்தைத் தயாரித்தல்

இலக்கு இலக்கம் 04

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்தல் மற்றும் வைத்தியர்களின் தேவையைப் பூர்த்திசெய்தல்.

உபாயமார்க்கம்

- தேவையை அடையாளம் காணுதல்
- வழங்குனர்களை தேர்ந்தெடுத்தல்.
- விலைக்கேள்விகளைக் கோருதல்
- இறக்குமதி செய்தல்.

இலக்கு இலக்கம் 05

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரச ஹோமியோபதி சிகிச்சைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல்.

உபாயமார்க்கம்

- ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
- சம்பளக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் எண்ணிக்கைக்கான அனுமதியைப் பெற்றுகொள்ளுதல்.
- செயலாற்றுகை
- அறிவு மற்றும் திறனை ஊக்குவித்தல்
- புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்தல் மற்றும் சேவையை பரவலாக்கல்.

இலக்கு இலக்கம் 05

சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அரச ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஒழுங்குவிதிகளை வெளியிடுதல்.

உபாயமார்க்கம்

- தேவையைக் கண்டறிதல் மற்றும் தேசிய கொள்கைளைத் தீர்மானித்தல்.
- வெளிநாட்டு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் கற்கைசெய்தல்.
- பல்கலைக்கழக ஆணைக்குழுவின் மூலப்பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளை அடையாளம் காணுதல்.
- உயர் கல்வி அமைச்சரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.
- ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்.
- அங்கீகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

10. ஹோமியோபதி வைத்திய சபையின் செயற்பாடுகள் (2017.01.01 – 2017.12.31)

01. அரச ஹோமியோபதி சிகிச்சைநிலையங்களின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம்



குருநாகல் அரச ஹோமியோபதி வைத்திய மத்திய நிலையத்தின் கீழ் நடாத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நடமாடும் சிகிச்சை நிலையம்.

1.1. அரச ஹோமியோபதி சிகிச்சைநிலையங்களின் செயலாற்றுகை.

இவ்வருடம் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் 07ற்கு வருகை தந்த நோயாளிகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை நிலையத்தின் பெயர்	வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை
தெகிவளை சிகிச்சை நிலையம்	15,651
பரகடுவ சிகிச்சை நிலையம்	9,733
மொனராகலை சிகிச்சை நிலையம்	4,760
பாலமுனை சிகிச்சை நிலையம்	11,487
குருநாகல் சிகிச்சை நிலையம்	9,196
மாத்தளை சிகிச்சை நிலையம்	9,816
தொலங்கமுவ சிகிச்சை நிலையம்	12,730
இவ்வருடம் வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை	**73,373**

1.2. அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் முகாமைத்துவம்

ஹோமியோபதி வைத்திய முறையை பொது மக்களுக்கான சுகாதார சேவையாக ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வைத்திய சபையினால் தற்போது 07 மாவட்டங்களில் நடாத்தப்படும் 07 ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களுக்கு வசதிகளை வழங்குவதன் ஊடாக அவைகளின் அளவு மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் கீழ் ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு, நீர் மற்றும் மின்சார கட்டணங்களைக் கொடுப்பனவு செய்தல், அவசிய மருந்துகளை வழங்கல் போன்ற பிரதான சேவை வழங்களுக்கு அப்பால் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. 2. (i) சிகிச்சை நிலையங்களுக்காக அலுவலக உதவியாளர்களை (தொழிலாளர்கள்) ஆட்சேர்ப்பு செய்தல்.

அரச ஹோமியோபதி வைத்திய நிலையங்களில் பணிபுரிவதற்காக வைத்திய அலுவலர்கள் மற்றும் மருந்து கலப்பவர் என்பவர்களுக்கு மேலதிகமாக வேறு எவரேனும் இல்லாமை இந்த சிகிச்சை நிலையங்களை நடாத்துவதில் காணப்பட்ட மிகப்பெரிய பிரச்சினையாகும். இதனால் முன்னர் காணப்பட்ட ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபையினால் 07 சிகிச்சை நிலையங்களுக்கும் 07 அலுவலக உதவியாளர்கள் (தொழிலாளர்கள்) அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். வைத்திய சபையானது இந்த 07 ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டதன் ஊடாக பணிக்குழுவின் எண்ணிக்கையானது இருபத்தியாறாக (26) அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1. 2. (ii) சிகிச்சை நிலையங்களுக்கு தொலைபேசி வழங்கல்.

மிகச்சிறந்த மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கத்துடன் 07 சிகிச்சை நிலையங்களுக்கும் தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு இடைக்கால வைத்திய சபை தீர்மானித்தது. உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அமைச்சினால் உரிய நிறுவனத்திற்கு வருட இறுதியில் அனுப்பப்பட்டிருந்தது.

1. 2. (iii) சிகிச்சை நிலையங்களுக்கு மேலதிக வைத்தியரை வழங்குவதற்கான மூலப்பிரமாணத்தைத் தயாரித்தல்.

அரச ஹோமியோபதி வைத்திய நிலையங்களுக்கு நாள்தோறும் வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் மேலதிக வைத்தியரொருவை வழங்குமாறு சிகிச்சை நிலையங்கள் மேற்கொண்ட வேண்டுகோள்கள் கவனத்தில் எடுக்கப்பட்டதன் பின்னர், ஹோமியோபதி வைத்திய முறையில் காணப்படும் விசேட தன்மையைக் கவனத்தில் கொண்டு நாள்தோறும் ஒரு வைத்தியரினால் சிகிச்சை அளிக்கக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக ஹோமியோபதி வைத்தியர்களுக்காக இரு செயலமர்வுகள் நடாத்தப்பட்டது.

02. ஹோமியோபதி நடமாடும் சிகிச்சை சேவைகள்

2.1. ஹோமியோபதி நடமாடும் சிகிச்சை சேவைகளை வழங்கல்.

ஹோமியோபதி வைத்திய சிகிச்சையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களின் ஊடாக நாட்டின் பல பாகங்களிலும் கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் சிகிச்சை சேவைகளை நடாத்துவதற்கு இவ்வருடம் வைத்திய சபை காரியாலயம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நடவடிக்கைகளுக்கு அவசியமான வைத்தியர்களும் பணிக்குழுவினரும் வெலிசர வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்டனர்

கொழும்பு மற்றும் புத்தளம் மாவடங்களில் இவ்வாறான 15 கருத்தரங்குகளும் நடமாடும் சிகிச்சையளிப்புகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், இதனூடாக 1702 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.



தெஹிவளை அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக பாடசாலையில் நடாத்தப்பட்ட சிகிச்சையளிப்பின் போது ஆசிரியர்களுக்கு சிகிச்சை வழங்கல்.

தெஹிவளை அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக இவ்வருடம் நடமாடும் சிகிச்சை வழங்கல் முகாம்கள் இரண்டு நடாத்தப்பட்டதுடன், குருநாகல் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தினால் ஒரு செயலமர்வும் ஒரு முகாமும் நடாத்தப்பட்டு மொத்தமாக ஒரு கருத்தரங்கும் 03 சிகிச்சை முகாம்களும் நடாத்தப்பட்டது. இதற்கு 398 நோயாளிகள் வருகை தந்திருந்தனர்.

அத்துடன், சிகிச்சை முகாமிற்கு அவசியமான மருந்துகள் உள்ளடங்களாக அனைத்தும் தனிப்பட்ட ரீதியில் இலவசமாக வைத்திய சபையின் தலைவரின் வழிகாட்டலின் கீழ், ஹோமியோபதி வைத்தியர்களினால் மருதானை, மீகொட, கொட்டாந்சேனை, நீர்கொழும்பு மற்றும் அரச மொழிகள் திணைக்களத்தினால் செயலமர்வு மற்றும் சிகிச்சை முகாம்கள் நடாத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய நோயாளிகளின் எண்ணிக்கை 1833 ஆகும்.

2.2. ஹோமியோபதி வைத்திய முறை பற்றிய சமூக அறிவூட்டலை அதிகரித்தல்.

ஹோமியோபதி வைத்திய முறையினால் டெங்கு நோயை தடுத்தல் மற்றும் இல்லாதொழித்தல் பற்றிய செயலமர்வொன்றும் சிகிச்சை முகாமொன்றும் தெஹிவலை நகரசபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தெஹிவளை சிகிச்சை நிலையத்திற்கு பொறுப்பான வைத்திய அலுவலர் டாக்டர் திருமதி அனுஷா ஹேமகுமாரவினால் நடாத்தப்பட்டது. இதில் 380 பேர் பங்குபற்றினர்.

ஹோமியோபதி இடைக்கால வைத்திய சபையின் தலைவரினால் கண்டி நகரத்தில் ஹோமியோபதி வைத்தியர்களுடன் சுயாதீன அடிப்படையில் ஹோமியோபதி வைத்திய முறையின் நோய் நிவாரண சக்தி மற்றும் மருந்து பாவனை எனும் தலைப்பில் 03 செயலமர்வுகள் நடாத்தப்பட்டது. இதில் 380 பேர் பங்குபற்றினர்.

2.3. இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடாகத்தின் ஊடான நிகழ்ச்சித்திட்டம்.

வைத்திய சபையின் தலைவர், சிகிச்சை நிலையங்களுக்கு பொறுப்பான வைத்திய அலுவலர்கள் மற்றும் பதிவுசெய்த வைத்திய அலுவலர்கள் பங்குபற்றிய 26 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இவ்வருடத்தினுள் நடாத்தப்பட்டது. அதேபோல் 13 வானொலி நிகழ்ச்சிகளில் மக்களுக்கு ஹோமியோபதி வைத்திய முறை தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஊடகத்தின் ஊடாக ஹோமியோபதி பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித்திட்டம்	ஊடகம்	வழிகாட்டல்
1	நுரையீரல் நோயைக் குணப்படுத்தவதற்கு ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
2	வாதம் நோய்களுக்கு ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
3	ஒஸ்டியோபொரோசிஸ் நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
4	விரைப்பு, நரம்புகள் கட்டியாதலுக்கான ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
5	காஸ்ரைட்டிஸ் நோய்கான ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
6	ஹோமியோபதி சிகிச்சை முறையின் அடிப்படை சித்தாந்தம்	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
7	ஹோமியோபதி அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.	சுயாதீன தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
8	கழுத்துவலிக்கான ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
9	பாக்கின்சன் நோய்கான ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
10	முதுகுவலிக்கான ஹோமியோபதி சிகிச்சை	சியத தொலைக்காட்சி	தெஹி‘வளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
11	முதுகுவலிக்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி

			சிகிச்சை நிலையம்
12	நரம்புகள் கட்டியாதலுக்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
13	டெங்கு நோயாளிகளுக்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
14	கழுத்துவலிக்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
15	சளி நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
16	இழுப்பு நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
17	விரல் பூட்டு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
18	கை பாதங்கள் உணர்வின்றி போவதற்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
19	வைரஸ் காச்சலுக்கான ஹோமியோபதி சிகிச்சை	ITN வானொலி	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
20	குறைபாடுகளுக்கான ஹோமியோபதி சிகிச்சை ஊடாக நோய்களுக்கு நிரந்தரத் தீர்வு	ஞாயிறு லக்பிம பத்திரிகை	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
21	டெங்கு நோயாளிகளின் உயிரை மீட்டுத்தரும் ஹோமியோபதி சிகிச்சை	இசிவர பத்திரிகையின் ஓகஸ்ட் மாத இதழ்	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
22	பாக்கின்சன் நோய்க்குத் தீர்வினைப் பெற்றுத்தரும் ஹோமியோபதி சிகிச்சை	இசிவர பத்திரிகையின் செப்டெம்பர் மாத இதழ்	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்

23	கை கால்களின் வளைவுகளை குணப்படுத்தும் ஹோமியோபதி சிகிச்சை	இசிவர பத்திரிகையின் ஒக்டோபர் மாத இதழ்	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
24	ஹோமியோபதி சிகிச்சை மூலம் நார் கட்டிப்படுதலை சுகப்படுத்தல்	இசிவர பத்திரிகையின் நவம்பர் மாத இதழ்	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்
25	கழுத்துவலிக்கான ஹோமியோபதி சிகிச்சை	இசிவர பத்திரிகையின் டிசம்பர் மாத இதழ்	தெஹிவளை ஹோமியோபதி சிகிச்சை நிலையம்

பொது மக்களை அறிவூட்டுவதற்கான இந்த நிகழ்ச்சித்திட்டம் ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஹோமியோபதி வைத்தியசாலைகளுக்கு மக்கள் வருகை தருவதற்கு வழிவகுத்தது.

03. புதிய ஹோமியோபதி சட்டத்தை அமுல்படுத்தல்

3.1 கட்டளைகளின் வரைவு.

2016ம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தை அமுல்படுத்தவதற்கு கௌரவ அமைச்சரின் ஆலோசனைப்படி தயாரிக்கப்பட்ட கட்டளை வரைவினை சமர்ப்பித்தல் இந்த ஆண்டின் முக்கிய பணியாக இடைக்கால வைத்திய சபை கருதியது. இதற்கமைவாக கீழ்வரும் வரைவுகள் இறுதிக் கட்டம் வரை தயாரிக்கப்பட்டது.

i. ஹோமியோபதி வைத்திய சபையினை நியமிப்பதற்கான கட்டளை.

ii. ஹோமியோபதி வைத்தியர்கள், துணை வைத்திய சேவையாளர்களை சிகிச்சை அளிப்பு மத்தியநியைங்கள் மற்றும் பல்வேறுபட்ட சேவைகளை வழங்கும் ஹோமியோபதி நிறுவனங்களை பதிவுசெய்தல் மற்றும் அதன் பதிவுகளை இற்றைப்படுத்தல் தொடர்பான கட்டளை.

3.2 ஒழுங்குவிதிகளின் வரைவினை தயாரித்தல்.

இந்தச் சட்டத்தின் 30ம் பந்திக்கு அமைவாக வைத்தியர்களை பதிவுசெய்வதற்காக அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளை தயாரிக்கும் அதிகாரம் வைத்திய சபையிடம் உள்ளது. அதன்படி உரிய பரீட்சைகளை நடாத்துவதற்கான ஒழுங்குவிதிகளை தயாரித்தல் வருட இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டது.

04. ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவுசெய்தல்

4.1 ஹோமியோபதி பட்டதாரி வைத்தியர்களைப் பதிவுசெய்தல்

இந்தியாவின் ஹோமியோபதி வைத்திய விஞ்ஞானத்தைக் கற்ற ஹோமியோபதி வைத்தியர்கள் 4 பேர் வைத்திய சபையின் பொது ஏட்டில் பதிவுசெய்யப்பட்டனர். இதன் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை 281 ஆகும்.

4.2 சட்டத்தின் 30(1) பந்திக்கு அமைவாக ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவுசெய்தல்.

2016ம் ஆண்டு 10 இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 30 (1) பந்திக்கு அமைவாக 5 வருடத்திற்கு மேல் ஹோமியோபதி வைத்தியப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு பரீட்சையை நடாத்தி ஹோமியோபதி வதைத்திய தொழில்வழங்குனர்களாக பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது. இதற்காக 185 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

இந்த பரீடசையை நடாத்துவதற்கு அவசியமான ஒழுங்குவிதிகள் இடைக்கால வைத்திய சபையினால் தயாரிக்கப்பட்டதுடன், இது 2017 ஆம் வருடத்தின் இறுதியில் முடிவுற்றது. ஒழுங்குவிதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

05. பணிக்குழுவிற்கு புதிய பதவிகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

வைத்திய சபை அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள இரு முகாமைத்துவ உதவியாளர்களினால் பூர்த்திசெய்யவதற்கு இயலாதவகையில் பணிகள் அதிகரிப்பதனால் அப்பணிகள் வைத்தியசபைக்கு சாட்டப்பட்டுள்ளதனால் புதிய ஹோமியோபதி சட்டத்தின் வைத்திய சபையின் நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகளை முழுமையாக வைத்திய சபைக்கு சாட்டப்பட்டள்ளதை அவதானித்த இடைக்கால வைத்திய சபை கணக்காளர் உள்ளடங்களான 07 புதிய பதவிகளுக்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்தது. அந்த தீர்மானம் அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டள்ளது.

06. வைத்திய சபை அலுவலகத்தை புதுப்பிப்பதற்கு வசதிகளை வழங்கல்

ஹோமியோபதி வைத்திய சபை அலுவலக கட்டடத்தில் வைத்திய சபை தலைவரின் அலுவலத்தை கொண்டு நடாத்துவதற்கு இயலுமானவகையில் புதிப்பிப்பதற்கும், பாடசாலைக் கட்டடத்தில் நூலகம், கேட்போர் கூடம், மருந்து களஞ்சியசாலை, களஞ்சியசாலை என்பவற்றை பேணும் வகையில் அந்தக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதற்காக ரூபா 1,355,624.34 ஒதுக்கப்பட்டு கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. வருட இறுதியில் இதன் அரைவாசிப் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

அதேபோல், அலுவலகத்திற்கு அவசியமான மரத்தளபாடங்கள் குறிப்பிட்டளவில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

07. ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்கல்.

ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான விண்ணப்பங்களில் 07 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு வைத்திய சபை நடவடிக்கை எடுத்தது. இதன் பெறுமதி 28,790.77 அமெரிக்க டொலர்களாகும்.

11. வருடாந்த கணக்கு அறிக்கை

31.12.2017ம் திகதி நிறைவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்கு

<u>உள்ளடக்கம்</u>

- 31.12.2017ம் திகதியில் நிதி நிலமைக் கூற்று
- நிதி நிலமைக் கூற்றுக்கான அடிப்படை (1 இருந்து 6 வரை) குறிப்பு
- 31.12.2017ம் திகதியில் நிறைவடையும் வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று
- நிதி செயலாற்றுகைக் கூற்றுக்கான அடிப்படை (1 இருந்து 9 வரை) குறிப்பு
- 31.12.2017ம் திகதியில் நிறைவடையும் விரிவான நிதிப் பாச்சல் கூற்று
- விரிவான நிதிப் பாச்சல் கூற்றுக்கான அடிப்படை (1 இருந்து 6 வரை) குறிப்பு
- 31.12.2017ம் திகதியில் பரீட்சை மீதி
- 31.12.2017ம் ஆண்டு நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமதித் தேய்வுப் பதிவேடு
- 31.12.2017ம் திகதியில் உரிமைப்பங்கு மாற்றல் அறிக்கை

கணக்கீட்டுக் கொள்கை

கணக்கினைச் சமர்ப்பித்தல்

இலங்கை அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்கள் (2009) இலக்கம் - 1ற்கு அமைவாக. அதேபோல் அதன் '' அதன் தன்மையின் மீது செலவை வகைப்படுத்தல்'' எனும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால வைத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, இலங்கை வங்கி கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் மற்றும் மீண்டுவரும் ஒதுக்கீடு, மூலதன ஒதுக்கீடு என்பவை கவனத்தில் கொள்ளப்பட்டு இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேய்மானத்திற்காக ஒதுக்குதல்

அனைத்து நிலையான சொத்துக்கருக்குமான தேய்மானம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2017ம் திகதி வரையுள்ள அனைத்து சொத்துக்களும் 12% வீத தேய்மான வீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம் இலக்கம் 07 (28)(b)ற்கு அமைவாக சொத்துக்களின் ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

31.12.2016ம் திகதி வரை சொத்துக்கள், வருடத்தில் எத்தினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

2017ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வருடத்தினுள் பயன்படுத்தப்படாததனால், அந்த வருடத்திற்கு தேய்மானம் வழங்கப்படவில்லை.

சொத்து வருடத்தில் எத்தினத்தில் அகற்றப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்படவில்லை.

பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

1983ம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுகள் சட்டத்திற்கு அமைவாக ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்ட அலுவலர்கள், பணிக்கொடையைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுவதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலர்களுக்கு மட்டும் பணிக்கொடை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு முழு சேவைக் காலத்திற்கும் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும் என்பதனால், இதுவரை ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு மீதியாக காட்டப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவச் சபை

2017.12.31ம் திகதியன்று நிதி நிலமைக்கூற்று

	குறிப்பு	2017	2016
சொத்து			
நடைமுறைச் சொத்து			
காசு மற்றும் காசுக்கு சமனானவை	1	2,274,507	2,334,346
நடைமுறையல்லாச் சொத்து			
பொறிகள் மற்றும் உபகரணங்கள்	2	1,715,119	1,003,317
கட்டட புனருத்தாபனம்		4,227,506	2,812,738
வேறு உபகரணங்கள்		1,450	1,450
		5,944,075	**3,817,505**
முழுச் சொத்து		**8,218,582**	**6,151,851**
பொறுப்பு			
நடைமுறைச் சொத்து			
கொடுப்பனவு செய்ய வேண்டியது	3	844,316	594,126
நடைமுறையல்லாச் சொத்து			
மொத்த சொத்து		844,316	594,126
தேறிய சொத்து		7,374,266	5,557,725
		8,218,582	**6,151,851**
தேறிய சொத்து/ மூலதனம்			
மூலதனம்		2,562,144	2,562,144
அரச மூலதன ஒதுக்கீடு		5,677,925	3,430,957
கூட்டு பற்றாக்குறை/ மேலதிகம்		(893,263)	-462,836
கடந்த வருடத்திற்கு சீராக்கல் கணக்கு		27,460	27,460
தேறிய சொத்து / கையிருப்பு		**7,374,266**	**5,557,725**

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு இடைக்கால நிர்வாக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

.....	.....	.....	.....
பதிவாளர்	தலைவர்	குழு அங்கத்தவர்	தயாரித்தவர்
ஹோமியோபதி	ஹோமியோபதி	ஹோமியோபதி	பிரதான கணக்காளர்
மருத்துவ சபை	மருத்துவ சபை	மருத்துவ சபை	சுதேச வைத்திய பிரிவு

குறிப்பு 1	2017	2016
காசு மற்றும் காசுக்கு சமனானவை		
கொமர்ஷல் வங்கி	1,702,684	1,626,281
இலங்கை வங்கி	375,923	512,165
இலங்கை வங்கி இராஜகிரிய	195,900	195,900
	2,274,507	**2,334,346**
குறிப்பு 2		
பொறிகள் மற்றும் உபகரணங்கள்		
பொறிகள் மற்றும் உபகரணங்கள் (கொள்வனவு விலை)	3,155,516	2,323,316
கழிக்கவும்		
கூட்டு மீதி	1,440,397	1,319,999
தேறிய பெறுமதி	**1,715,119**	**1,003,317**
குறிப்பு 3		
கொடுப்பனவு செய்ய வேண்டியது		
கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம்	143,861	185,616
கொடுப்பனவு செய்ய வேண்டிய தொலைபேசிக் கட்டணம்	5,643	647
கொடுப்பனவு செய்ய வேண்டிய மருத்துவ நிலையக் கட்டணம்		28,450
கொடுப்பனவு செய்ய வேண்டிய மின்சாரக் கட்டணம்	4,296	1,737
கொடுப்பனவு செய்ய வேண்டிய தண்ணீர்க் கட்டணம்	9,698	792
கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவு	98,860	
கொடுப்பனவு செய்ய சேமலாப நிதி	7,475	
கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியம்	1,869	
கொடுப்பனவு செய்ய வேண்டிய வைத்திய சபை தலைவருக்கான கொடுப்பனவுக் கட்டணம்	75,000	
கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடை	497,614	376,884
	844,316	**594,126**

குறிப்பு 4

கணக்கினைச் சமர்ப்பித்தல்

இலங்கை அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்கள் (2009) இலக்கம் - 1ற்கு அமைவாக.

குறிப்பு 5

தேய்மானத்தை ஒதுக்குதல்

அனைத்து நிலையான சொத்துக்கருக்குமான தேய்மானம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2017ம் திகதி வரையுள்ள அனைத்து சொத்துக்களும் 12% வீத தேய்மான வீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம இலக்கம் 07 (28)(b)ற்கு அமைவாக சொத்துக்களின் ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

31.12.2016ம் திகதி வரை சொத்துக்கள், வருடத்தில் எத்தினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

2017ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வருடத்தினுள் பயன்படுத்தப்படாததனால், அந்த வருடத்திற்கு தேய்மானம் வழங்கப்படவில்லை.

சொத்து வருடத்தில் எத்தினத்தில் அகற்றப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்படவில்லை.

குறிப்பு 6

பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

1983ம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுகள் சட்டத்திற்கு அமைவாக ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்ட அலுவலர்கள், பணிக்கொடையைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுவதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலர்களுக்கு மட்டும் பணிக்கொடை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களுக்கு முழு சேவைக் காலத்திற்கும் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும் என்பதனால், இதுவரை ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு மீதியாக காட்டப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவச் சபை
2017.12.31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2017	2016
வருமானம்			
அரச மீண்டுவரும்		13,786,709	12,596,733
ஏனைய வருமானம்	1	51,000	43,100
வங்கி வட்டி		83,047	79,534
முழு வருமானம்		**13,920,756**	**12,719,367**
செலவு			
சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர்	2	11,972,353	10,301,697
வழங்கல் மற்றும் நுகர்வுப்	3	69,990	18,845
தேய்வு மற்றும் தேய்வு முறை		120,398	136,816
ஏனைய செலவுகள்	4	2,181,798	2,678,161
சட்டக்கட்டணம்		6,644	6,363
நிதி ஆகுசெலவு (வங்கிக் கட்டணம்)			
மொத்தச் செலவு		**14,351,183**	**13,141,882**
பற்றாக்குறை / மிகை		(430,427)	(422,515)

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு இடைக்கால நிர்வாக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

.....	.....	.....	.....
பதிவாளர்	தலைவர்	குழு அங்கத்தவர்	தயாரித்தவர்
ஹோமியோபதி	ஹோமியோபதி	ஹோமியோபதி	பிரதான கணக்காளர்
மருத்துவ சபை	மருத்துவ சபை	மருத்துவ சபை	சுதேச வைத்திய பிரிவு

குறிப்பு 1	2017	2018
வேறு வருமானங்கள்		
வருடாந்தக் கட்டணம்	4,050	5,100
வேறு பெறுவனவுகள்	46,950	38,000
	51,000	**43,100**
குறிப்பு 2		
சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள்		
பணிக்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவு	10,424,323	8,961,708
ஊழியர் நம்பிக்கை நிதியம்	1,238,424	1,071,991
ஊழியர் சேம இலாப நிதி	309,606	267,998
	11,972,353	**10,301,697**
குறிப்பு 3		
வழங்கல் மற்றும் நுகர்வு பண்டங்கள்		
எழுதுகருவிகள்	12,896	6,002
உபசரணைச் செலவு	57,094	12,843
	69,990	**18,845**
குறிப்பு 4		
ஏனைய செலவுகள்		
கணக்காய்வுக் கட்டணம்	20,000	40,000
தொலைபேசிக் கட்டணம்	80,635	47,358
மருந்து நிலையக் கட்டணங்கள்	220,240	333,450
மின்சாரக் கட்டணம்	55,686	21,290
நீர்க் கட்டணம்	64,170	52,397
பயணச் செலவு மற்றும் தங்குமிடச் செலவு	1,570	6,070
எரிபொருள் செலவு	13,500	
தபால் செலவு	5,815	
அச்சிடுதல் கட்டணம்	82,690	275,829
வைத்திய சபைக்கான நானவித செலவுகள்	27,523	21,679
மொழிபெயர்ப்புக் கட்டணம்	25,740	17,587
அடையாள அட்டை தயாரித்தல்	12,420	
தலைவருக்கான கொடுப்பனவு	1,050,000	
இடைக்கால வைத்திய சபைக்கூட்டக் கொடுப்பனவு	258,000	168,000
பத்திரிகை அறிவித்தல் கட்டணம்	106,318	
சிறிய புதுப்பித்தல் செலவுகள்	36,761	
இழப்பீட்டுக் கொடுப்பனவு	120,730	376,884
வைத்திய சிகிச்சை முகாம்களுக்கான நானாவித செலவுகள்		17,130
அலுவலக உபகரண புதுப்பித்தல்		10,047
வைத்திய முகாம்களுக்கான உபகரணம் (குப்பி மற்றும் உறைகள்)		1,290,440
	2,181,798	**2,678,161**

குறிப்பு 5

கணக்கினை சமர்ப்பித்தல்

இலங்கை அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்கள் (2009) இலக்கம் - 1ற்கு அமைவாக. அதேபோல் அதன் " அதன் தன்மையின் மீது செலவை வகைப்படுத்தல்" எனும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 6

2017 வருடத்தினுள் கொடுப்பனவு செய்யப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் 2014/ 2015ம ஆண்டுக்குரியதென்பதனால் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீட்டு கணக்கிற்கு ஈடுசெய்யப்பட்டுள்ளதுடன், 2017ம் ஆண்டுக்கு கணக்காய்வுக் கட்டணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 7

1983ம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுகள் சட்டத்திற்கு அமைவாக ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்ட அலுவலர்கள், பணிக்கொடையைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுவதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்ட அலுவலர்களுக்கு மட்டும் பணிக்கொடை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், வருடத்திற்கு உரிய பெறுமதி நிதி செயலாற்றுகைக கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பு 8

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம் இலக்கம் 07 (28)(b)ற்கு அமைவாக, ஆகுசெலவு மற்றும் உபகரணங்களை கொண்டுவருவதற்கான போக்குவரத்துச் செலவு மூலதனப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பு 9

இடைக்கால வைத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, இலங்கை வங்கி கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் மற்றும் மீண்டுவரும் ஒதுக்கீடு, மூலதன ஒதுக்கீடு என்பவை கவனத்தில் கொள்ளப்பட்டு இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவச் சபை

31 டிசம்பர் 2017ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய நிதி காசுப்பாச்சல் கூற்று

	குறிப்பு	2017	2016
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக நிதிப் பாச்சல்			
கிடைப்பனவு			
அரசினால் வழங்கப்பட்ட மீண்டுவரும் நன்கொடை		13,786,709	13,663,330
வங்கி வட்டி		83,047	79,534
ஏனைய கொடுப்பனவுகள்	1	51,000	43,100
		13,920,756	**12,785,964**
கொடுப்பனவு			
ஊழியர் செலவு	2	11,864,149	10,277,013
வங்கி வட்டி (வங்கிக் கட்டணம்)		6,644	6,363
வேறு கொடுப்பனவுகள்	3	2,109,802	2,386,317
		13,980,595	**12,669,693**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடான தேறிய நிதிப் பாச்சல்		**(59,839)**	**116,271**
முலதன செயற்பாடுகளின் ஊடான நிதிப் பாச்சல்			
அரச நிதி மூலதன நன்கொடை		2,246,968	1,858,910
கட்டட புனருத்தாபனம்		1,414,768	1,858,910
ஆதனம் மற்றும் பொறிகள்		832,200	
முதலீட்டு செயற்பாடுகளின் ஊடான தேறிய நிதிப் பாச்சல்			
காசு மற்றும் காசுக்கு சமனானவை			
தேறிய அதிகரிப்பு	4	(59,839)	116,271
இக்காலத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமனானவை	5	2,334,346	2,218,075
இக்காலத்தின் இறுதியில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமனானவை	6	2,274,507	2,334,346

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு இடைக்கால நிர்வாக சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்தகின்றோம்.

.....	.....	.....	.....
பதிவாளர்	தலைவர்	குழு அங்கத்தவர்	தயாரித்தவர்
ஹோமியோபதி	ஹோமியோபதி	ஹோமியோபதி	பிரதான கணக்காளர்
மருத்துவ சபை	மருத்துவ சபை	மருத்துவ சபை	சுதேச வைத்திய பிரிவு

	2017	2016
குறிப்பு 1 - வேறு வருமானங்கள்		
வருடாந்தக் கட்டணம்	4,050	5,100
நானாவித வருமானம்	46,950	38,000
	51,000	43,100
குறிப்பு 2 - ஊழியர் செலவு		
பணிக்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவு	10,325,463	8,937,024
ஊழியர் நம்பிக்கை நிதியம்	1,230,949	1,071,991
ஊழியர் சேம இலாப நிதி	307,737	267,998
	11,864,149	10,277,013
குறிப்பு 3 - ஏனைய கொடுப்பனவு		
கணக்காய்வுக் கட்டணம்	61,755	66,597
தொலைபேசிக் கட்டணம்	75,639	52,675
மருத்துவ முகாமுக்கான நானாவிதச் செலவு	242,567	342,450
மின்சாரக் கட்டணம்	53,127	20,269
நீர்க் கட்டணம்	55,264	53,405
பயணச் செலவு	1,570	7,637
எரிபொருள் செலவு	13,500	
தபால் கட்டணம்	5,815	
அச்சிடுதல் கட்டணம்	82,690	275,829
வைத்திய சபைக்கான நானாவித செலவு	33,646	
எழுதுகருவி	12,896	6,902
உபசரணைச் செலவு	57,094	12,843
மொழிபெயர்ப்புக் கட்டணம்	25,740	32,074
அடையாள அட்டை வழங்கல் செலவு	12,420	
தலைவருக்கான கொடுப்பனவு	975,000	
இடைக்கால வைத்திய சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு	258,000	168,000
அறிவித்தல் கட்டணம்	106,318	
அலுவலக சிறிய புதுப்பித்தல்	36,761	
நானாவிதச் செலவுகள்		21,679
காரியாலய உபகரண புதுப்பித்தல்		10,047
வைத்திய முகாமுக்கான உபகரணங்கள்		1,315,910
	2,109,802	**2,386,317**

	2017	2016
குறிப்பு 4 - காசு மற்றும் காசுக்கு சமனானவை தேறிய அதிகரிப்பு		
வருடத்தின் இறுதியில் காசு மீதி	2,274,507	2,334,346
வருடத்தின் ஆரம்பத்தில் காசு மீதி	2,334,346	2,218,075
	(59,839)	**116,271**
குறிப்பு 5 - காலத்தின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவை		
கொமர்ஷல் வங்கி	1,626,281	1,553,110
இலங்கை வங்கி	512,165	469,065
இலங்கை வங்கி - இராஜகிரிய	195,900	195,900
	2,334,346	**2,218,075**
குறிப்பு 6 - காலத்தின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவை		
கொமர்ஷல் வங்கி	1,702,684	1,626,281
இலங்கை வங்கி	375,923	512,165
இலங்கை வங்கி - இராஜகிரிய	195,900	195,900
	2,274,507	**2,334,346**
	(59,839)	**116,271**
பொது செயற்பாடுகளின் மீதான தேறிய மிகை / பற்றாக்குறை தொழிற்பாடுகளின் செயற்பாடுகளின் மீதான தேறிய காசு பாச்சல் உடன் சீராக்கல்		
பொது செயற்பாடுகளின் மீதான தேறிய மிகை / பற்றாக்குறை தொழிற்பாடுகளின் செயற்பாடுகளின் மீதான காசல்லா மாற்றங்கள்	(430,427)	(422,515)
தேய்வு	120,398	136,816
கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவு அதிகரிப்பு	250,190	401,970
கடந்த வருடத்து இணக்கம் கணக்கில் வருடாந்த மாற்றம்		
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மீதான தேறிய தொகை	(59,839)	116,271

ஹோமியோபதி மருத்துவ சபை

31.12.2017ம் திகதியில் பரீட்சை மீதி

விபரம்	செலவு (ரூபா)	வரவு (ரூபா)
அரச ஒதுக்கீடு - மீண்டுவரும்		13,786,709
கணக்காய்வுக் கட்டணம்	20,000	
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு		143,861
தொலைபேசிக் கட்டணம்	80,635	
அட்டுறு மின்சாரக் கட்டணம்		5,643
சிகிச்சை முகாமுக்கான செலவு	214,117	
மின்சாரக் கட்டணம்	55,686	
அட்டுறு மின்சாரக் கட்டணம்		4,296
நீர்க் கட்டணம்	64,170	
அட்டுறு நீர்க் கட்டணம்		9,698
அலுவலக ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவு	10,424,323	
அட்டுறு அலுவலக ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவு		98,860
ஊழியர் சேமலாப நிதியம்	1,238,424	
அட்டுறு ஊழியர் சேமலாப நிதியம்		7,475
ஊழியர் நம்பிக்கை நிதியம்	309,606	
அட்டுறு ஊழியர் நம்பிக்கை நிதியம்		1,869
பயணச் செலவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு	1,570	
எரிபொருள் செலவு	13,500	
தபால் செலவு	5,815	
அச்சிடுதல் கட்டணம்	82,690	
மருத்துவ முகாம் மற்றும் வைத்திய சபைக்கான நானாவித செலவுகள்	33,646	
எழுதுகருவி	12,896	
உபசரணைச் செலவு	57,094	
மொழிபெயர்ப்புக் கட்டணம்	25,740	
அடையாள அட்டை தயாரிப்புச் செலவு	12,420	

வைத்திய சபையின் தலைவரின் கொடுப்பனவு	1,050,000	
அட்டுறு வைத்திய சபையின் தலைவரின் கொடுப்பனவு		75,000
இடைக்கால சபை அலுவலர்களின் கொடுப்பனவு	258,000	
பத்திரிகை அறிவித்தல் கட்டணம்	106,318	
சிறு அலுவலக புதுப்பித்தல் செலவு	36,761	
போக்குவரத்துச் செலவு		
வருடாந்த தேய்மானம்	120,398	
தேய்மான ஒதுக்கீடு		1,440,397
பணிக்கொடை செலவு	120,730	
பணிக்கொடை ஒதுக்கீடு		497,614
அரச ஒதுக்கீடு - மூலதனம்		5,677,925
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	3,155,516	
கட்டட புனருத்தாபனம்	4,227,506	
அலுவலக உபகரணம்	1,450	
மூலதனம்		2,562,144
வங்கி மீதி - இலங்கை வங்கி	375,923	
வங்கி மீதி - கொமர்ஷல் வங்கி	1,702,684	
வ்ங்கி மீதி - இலங்கை வங்கி, இராஜகிரிய	195,900	
வங்கிக் கட்டணம்	6,644	
வங்கி வட்டி வருமானம்		83,047
வருடாந்த கட்டணம் உள்ளடங்களாக நாநாவித வருமானம்		51,000
கடந்த வருட சீராக்கல் கணக்கு		27,460
31.12.2016ம் திகதியில் மிகை பற்றாக்குறைக் கணக்கு மீதி	462,836	
மொத்தம்	**24,472,998**	**24,472,998**

ஹோமியோபதி மருத்துவ சபை

2017ம் ஆண்டு நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமதித் தேய்வுப் பதிவேடு (2017.12.31 வரை)

தொடர் இலக்கம்	பண்டத்தின் பெயர்	கொள்வனவுத் திகதி	அளவு	கொள்வனவு விலை	31.12.2011 ம் திகதியில் தேய்வு	01.01.2012ம் திகதியில் பெறுமதி	2012 வருடாந்த தேய்வு	01.01.2013 பெறுமதி	31.12.2013 ம் திகதியில் தேய்வு	01.01.2014 ம் திகதியில் பெறுமதி	31.12.2014 ம் திகதியில் தேய்வு	01.01.2015 ம் திகதியில் பெறுமதி	31.12.2015 ம் திகதியில் தேய்வு	01.01.2016 ம் திகதியில் பெறுமதி	31.12.2016 ம் திகதியில் தேய்வு	01.01.2017 ம் திகதியில் பெறுமதி	31.12.2017 ம் திகதியில் தேய்வு	01.01.2018 ம் திகதியில் பெறுமதி
					தேய்வு	பெறுமதி	தேய்வு	பெறுமதி										
	தேய்வு வீதம் 12மூ																	
1	2008ற்கு முன்னர்			280,492	140,452	140,040	16,805	123,235	14,788	108,447	13,013.64	95,433.34	11,452.00	83,981.34	1,077.76	73,903.58	8,868.43	65,035
2	பெயர் பலகை - இரும்பு	28/04/2008	1	20,125	8,056	12,069	1,448	10,621	1,274	9,346	1,121.55	8,224.69	986.96	7,237.72	868.53	6,369.20	764.30	5,605
3	இன்டநெட் மொடம்	26/06/2008	1	3,910	1,565	2,345	281	2,064	248	1,816	217.92	1,598.05	191.77	1,406.29	168.75	1,237.53	148.50	1,089
4	தொலைபேசி	01/07/2008	7	34,300	13,730	20,570	2,468	18,102	2,172	15,929	1,911.53	14,017.88	1,682.15	12,335.73	1,480.29	10,855.45	1,302.65	9,553
5	கர்டன் தடி	06/10/2008		8,400	3,363	5,037	604	4,433	532	3,901	468.08	3,432.57	411.91	3,020.67	362.48	2,658.19	318.98	2,339
6	யுஅடகைநைச 100 றயவவள	25/06/2009	5	99,000	31,534	67,466	8,096	59,370	7,124	52,246	6,269.48	45,976.19	5,517.14	40,459.05	4,855.09	35,603.96	4,272.48	31,331
7	ஊழடரஅெ ளிநியமநசள	25/06/2009	10	33,000	10,512	22,488	2,699	19,789	2,375	17,415	2,089.76	15,324.94	1,838.99	13,485.95	1,618.31	11,867.64	1,424.12	10,444
8	கு.ஆ.றுசைநடநளள ஆஜைசழிாழநெ	25/06/2009	5	66,000	21,023	44,977	5,397	39,580	4,750	34,830	4,179.62	30,650.57	3,678.07	26,972.50	3,236.70	23,735.80	2,848.30	20,888
9	றாவைந டீழயசன	28/06/2009	5	26,000	8,282	17,718	2,126	15,592	1,871	13,721	1,646.50	12,074.32	1,448.92	10,625.40	1,275.05	9,350.35	1,122.04	8,228
10	ழுரீ ீசழதநஉவழச	29/06/2009	1	13,384	4,263	9,121	1,095	8,026	963	7,063	847.60	6,215.71	745.88	5,469.82	656.38	4,813.44	577.61	4,236
11	வுயடிடந ளுஙரநயச-றயரன	07/07/2009	3	6,060	1,930	4,130	496	3,634	436	3,198	383.79	2,814.48	337.74	2,476.74	297.21	2,179.53	261.54	1,918
12	்டயளவஜஉ னுரளவ டீஜைபெ	07/07/2009	2	4,000	1,274	2,726	327	2,399	288	2,111	253.32	1,857.69	222.92	1,634.77	196.17	1,438.60	172.63	1,266
13	புநளவநவழச ஊழில ்சவைநெச	07/07/2009	1	196,000	62,432	133,568	16,028	117,540	14,105	103,435	12,412.21	91,022.85	10,922.74	80,100.11	9,612.01	90,488.10	8,458.57	52,030
14	னுரிடயைவழச ஊயடிநைெவ	07/07/2009	1	8,400	2,676	5,724	687	5,037	604	4,433	531.92	3,900.75	468.09	3,432.66	411.92	3,020.74	362.49	2,658
15	கோவை கபினர்-4இலாட்சிகள்	10/07/2009	5	60,230	19,185	41,045	4,925	36,120	4,334	31,785	3,814.23	27,971.02	3,356.52	24,614.50	2,953.74	21,660.76	2,599.29	19,081
16	இரும்பு அலுமாரி	10/07/2009	3	33,516	10,676	22,840	2,741	20,099	2,412	17,687	2,122.48	15,564.82	1,867.78	13,697.04	1,643.65	12,053.40	1,446.41	10,607
17	தேக்கு ஜன்னல் மற்றும் கதவு	10/07/2009	1	32,300	10,289	22,011	2,641	19,370	2,324	17,045	2,045.44	14,999.88	1,799.99	13,199.89	1,583.58	11,615.91	1,392.91	10,222
18	அலுவலக மேசை	10/07/2009	2	16,000	5,097	10,903	1,308	9,595	1,151	8,443	1,013.19	7,430.09	891.61	6,538.48	784.62	5,753.86	690.46	5,063
19	்சழதநஉவழச ழுிவழஅய ஆழஎநை	13/10/2009	2	180,000	57,335	122,665	14,720	107,945	12,953	94,992	11,399.01	83,592.76	10,031.13	73,561.63	8,827.40	64,734.24	7,768.11	58,966
20	்சழதநஉவழச ளுஉசநெ எநபய	13/10/2009	2	36,960	11,773	25,187	3,022	22,165	2,660	19,505	2,340.58	17,164.24	2,059.71	15,104.53	1,812.54	13,291.98	1,595.04	11,697
21	அலுமினியம் ஏணி	17/10/2009	1	6,250	1,991	4,259	511	3,748	450	3,298	395.78	2,902.39	348.29	2,554.10	306.49	2,247.61	269.71	1,978
22	காஸ் குக்கர்	17/10/2009	1	3,105	989	2,116	254	1,862	223	1,639	196.64	1,441.99	173.04	1,268.96	152.27	1,116.68	134.00	983
23	பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கி	17/10/2009	1	4,600	1,465	3,135	376	2,759	331	2,428	291.33	2,136.41	256.37	1,880.04	225.61	1,654.44	198.53	1,456
24	பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கி	19/05/2009	1	12,175	3,878	8,297	996	7,301	876	6,425	771.02	5,654.17	678.50	4,975.67	597.08	4,378.59	525.43	3,853
25	பிளாஸ்டிக் கதிரை	12/05/2009	6	6,360	2,026	4,334	520	3,814	458	3,356	402.75	2,953.50	354.42	2,599.08	311.89	2,287.19	274.46	2,013

26	பிளாஸ்டிக் வட்ட மேசை	12/05/2009	2	4,500	1,433	3,067	368	2,699	324	2,375	285.01	2,090.07	250.81	1,839.27	220.71	1,618.55	194.23	1,424
27	தண்ணீர் தாங்கி சட்டகம்	17/10/2009	1	7,000	2,230	4,770	572	4,198	504	3,694	443.27	3,250.62	390.07	2,860.55	343.27	2,517.28	302.07	2,215
28	தண்ணீர் தாங்கி சட்டகம்	19/05/2009	1	5,815	1,852	3,963	476	3,487	418	3,069	368.27	2,700.67	324.08	2,376.59	285.19	2,091.40	250.97	1,840
29	கையுள்ள மரக் கதிரை	21/07/2009	200	480,000	152,893	327,107	39,253	287,854	34,542	253,312	30,397.40	222,914.26	26,749.71	196,164.55	23,539.75	172,624.80	20,714.98	151,910
30	எழும்புக்கூடு மாதிரி	29/04/2009	1	14,000	4,456	9,544	1,145	8,399	1,008	7,391	886.90	6,503.97	780.48	5,723.49				
31	சுவர் கடிகாரம்	31/12/2010	1	600	135	465	56	409	49	360	43.21	316.88	38.03	278.86	33.46	245.40	29.45	216
32	மொபிடல் டொங்கல்	19/07/2012	1	4,065	-	4,065	488	3,577	429	3,148	377.75	2,770.18	332.42	2,437.76	292.53	2,145.23	257.43	1,886
33	சைக்கில்	07/09/2013	1	10,845	-		-	10,845	1,301	9,544	1,145.23	8,398.37	1,007.80	7,390.56	886.87	6,503.70	780.44	5,723
34	தண்ணீர் பில்டர்	07/09/2013	1	8,600	-		-	8,600	1,032	7,568	908.16	6,659.84	799.18	5,860.66	703.28	5,157.38	618.89	4,538
35	எச்பி கணணி	31/12/2014	1	119,900						119,900	14,388.00	105,512.00	12,661.44	92,850.56	11,142.07	81,708.49	9,805.02	71,903
36	நுவே ளநவ	31/12/2014	4	140,000						140,000	16,800.00	123,200.00	14,784.00	108,416.00	13,009.92	95,406.08	11,448.73	83,957
37	நிறையளக்கும் தராசு	31/12/2014	2	4,000						4,000	480.00	3,520.00	422.40	3,097.60	371.71	2,725.89	327.11	2,399
38	மின்சார விசிறி(சீலிங்)	31/12/2014	7	24,430						24,430	2,931.60	21,498.40	2,579.81	18,918.59	2,270.23	16,648.36	1,997.80	14,651
39	மின்சார விசிறி(பெடஸ்டல்)	31/12/2014	7	33,250						33,250	3,990.00	29,260.00	3,511.20	25,748.80	3,089.86	22,658.94	2,719.07	19,940
40	கதிரை(சுழலும்)	31/12/2014	4	37,632						37,632	4,515.84	33,116.16	3,973.94	29,142.22	3,497.07	25,645.15	3,077.42	22,568
41	கையுள்ள கதிரை (துணிக் குஷன்)	31/12/2014	31	159,712						159,712	19,165.44	140,546.56	16,865.59	123,680.97	14,841.72	108,839.26	13,060.71	95,779
42	இரும்பு அலுமாரி	31/12/2014	3	43,680						43,680	5,241.60	38,438.40	4,612.61	33,825.79	4,059.10	29,766.70	3,572.00	26,195
43	கையுள்ள கதிரை(பிளாஸ்டிக்)	31/12/2014	15	15,120						15,120	1,814.40	13,305.60	1,596.67	11,708.93	1,405.07	10,303.86	1,236.46	9,067
44	தேக்கு மேசை(5ஓ3)2 இலாட்சிகள்	31/12/2014	1	19,600						19,600	2,352.00	17,248.00	2,069.76	15,178.24	1,821.39	13,356.85	1,602.82	11,754
45	பெயர் பலகை	23.06.2017	7	259,990										-		259,990		259,990
46	கணணி மேசை	30.12.2017	1	13,512										-		13,512		13,512
47	நிறைவேற்றுத்தர மேசை	30.12.2017	2	147,311												147,311		147,311
48	கோப்பு இறாக்கை	30.12.2017	2	29,629												29,629		29,629
49	தேக்கு கதிரை	30.12.2017	6	64,971												64,971		64,971
50	தேக்கு பின்னல் கதிரை	30.12.2017	4	140,412												140,421		140,421
51	நிறைவேற்றுத்தர கதிரை	30.12.2017	3	60,375												60,375		60,375
52	கணணி		1	116,000												116,000		116,000
				3,155,516	598,795	1,107,752	132,930	994,267	119,312	1,472,279	176,673.45	1,295,605	155,473	1,140,133	136,816	1,835,517	120,398	1,715,119

ஹோமியோபதி வைத்திய சபை

உரிமை மாற்றம்	ஒதுக்கு ரூ
ஆரம்ப மீதி (01.01.2017ம் திகதியில்)	2,562,144
அரசின் மூலதன ஒதுக்கீடு	5,677,925
கடந்த வருட சீராக்கல்	27,460
கூட்டு பற்றாக்குறை / மிகை	(893,263)
வருட இறுதியில் மீதி (31.12.2017ம் திகதியில்)	**7,374,266**

12. கணக்காய்வு அறிக்கை

இவ்வருடம் ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் 2016ம் ஆண்டு 10ம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது நிர்வாக சபையான இடைக்கால மருத்துவ சபையினால் மேற்கொள்ளப்பட்டது. சபையின் நிதி நடவடிக்கைகள் சமாந்தர அமைச்சான சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் உள்ள சுதேச வைத்தியப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

2016ம் ஆண்டு 10 இம் இலக்க புதிய சட்டத்தை அமுல்படுத்தவதற்கு அவசியமான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் தொடர்பான பிரதான பொறுப்பாக எடுத்துகொண்ட இடைக்கால மருத்துவசபையின் கௌரவ அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட கட்டளை வரைவினை சமர்ப்பிப்பதற்கு முதலில் கவனம் செலுத்தப்பட்டது.

மருத்துவ சபையினால் பேணப்படும் 7 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களில் காணப்படும் 7 அலுவலக உதவியாளர்களுக்கான வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்ததன் ஊடக நிறுவனத்தின் கட்டமைப்பை பலமூட்டி விரிவுபடுத்தவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஹோமியோபதி பட்டதாரிகள் நால்வரைப் (4) பதிவு செய்ததன் ஊடாக இதுவரை மருத்துவசபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த மருத்துவர்களின் எண்ணிக்கை 281ஆக அதிகரித்தது.

இவ்வாறாக, மருத்துவ சபையின் ஒட்டுமொத்த பணிகள் தொடர்பாக நிறுவனத்தை நடாத்துவது தொடர்பான நிர்வாக மற்றும் நிதி செயற்பாடுகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டது.

டாக்டர் சந்தன வீரசேகர

தலைவர்

ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபை

நல்வாழ்த்துக்கள்



கௌரவ சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய

அமைச்சர்

கௌரவ பிரதி அமைச்சர்

செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்

ஹோமியோபதி வைத்திய சபையின் அங்கத்தவர்கள்

சட்டத் திணைக்களம்

கணக்காய்வாளர் திணைக்களம்

ஹோமியோபதி மருத்துவ சபையின் பதிவாளர்

மற்றும்

பணிக்குழுவினர்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. எச்எஸ்எம்/பீ/எச்எம்சீ/1/17/04

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 ஆகஸ்ட் 15

தலைவர்,

ஹோமியோபதி வைத்திய சபை

ஹோமியோபதி வைத்திய சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ஹோமியோபதி வைத்திய சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 40(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஜஎஸ்எஸ்ஏஜ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கைகளின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பராயம் முனைப்பழியுள்ளதாக்குகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹோமியோபதி வைத்திய சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு ஆரம்பமாவது அது பயன்படுத்துவதற்கு தயார் நிலையில் கொண்டு வரப்பட்டதன் பின்னராக இருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் சபையினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி கவனத்தில் கொள்ளப்படாமல் அந்த கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்தல் மற்றும் அகற்றப்படுகின்ற ஆண்டின் போது பெறுமானத்தேய்வு செய்யப்படாமை என்ற கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 8

நியமத்தின் 100 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்கு எதிராக காணப்படுகின்ற 5 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருந்துகளை உறையிடுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மருந்துக் கொள்கலன் டப்பி மற்றும் உறைகளுக்காக செலவிடப்பட்ட கிரயம் என்பன கொள்வனவு செய்யப்படுகின்ற ஆண்டின் போதே செலவினமொன்றாக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதனால் முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்ட ரூபா 233,000 கிரயமான மருந்து கொள்கலன் மற்றும் டப்பி என்பன ஆண்டின் செலவினமாக பதியப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 685,300 கிரயமாக எஞ்சிய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமான நடைமுறைச் சொத்துக்களும் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 19 ஊழியர்களிடமிருந்து முழுமையான சேவைக் காலத்திற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்க வேண்டிய பணிக்கொடை நிதிஏற்பாடு ரூபா 840,650 ஆக இருந்த போதிலும், அதற்குப் பதிலாக ரூபா 497,614 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்மையின் காரணமாக பணிக்கொடை ஏற்பாடு ரூபா 343,036 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பரீட்சைக் கட்டணமாக 2014 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த ரூபா 195,900 தொகை சபையின் பெயரிலுள்ள நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளரின் பெயரில் பேணப்பட்ட நடைமுறைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த வருமானம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் தொடர்ந்தும் அது சபையின் சொத்தொன்றாக இல்லாதிருந்த போதும் அதன் பெறுமதி சொத்தொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஹோமியோபதி வைத்திய சபை அலுவலகம் சுகாதார அமைச்சிற்குரிய கட்டிடமொன்றில் நடாத்திக் கொண்டிருந்ததுடன், அக்கட்டிடம் மற்றும் நிலத்தின் உரித்து சபைக்குச் சொந்தமற்றதாகக் காணப்பட்ட போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலப்பகுதியில் அந்தக் கட்டிடத்திற்கு பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 4,227,506 தொகை நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 259,990 கிரயமான 7 பெயர்ப் பதாகைகளின் பெறுமானத் தேய்வு ரூபா 31,199 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிவிளைவுகள் ரூபா 430,427 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 422,515 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 7,912 குறைவொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மீண்டெழும் நிதிஏற்பாடு ரூபா 1,189,976 இனாலும் மொத்தச் செலவினம் ரூபா 1,209,301 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட குறைவிற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 111,977 மற்றும் ரூபா 170,636 தொகையான பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 271,598 மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 422,515 மற்றும் ரூபா 430,427 பற்றாக்குறை ஏற்பட்டிருந்தன. எனினும், நிதிவிளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,873,487 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 9,951,274 வரை அதாவது 6 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான பற்றாக்குறையுடன் அதிகரித்திருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 10,015,998 மற்றும் ரூபா 11,662,324 வரை அதிகரித்திருந்தது.

3.2 நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகள்

வைத்திய சபையில் சேவையாற்றிய வைத்தியர் ஒருவரையும் தொழிலாளர் ஒருவரையும் சேவையிலிருந்து அகற்றியமைக்கு எதிராக முறையே ரூபா 3 மில்லியன் மற்றும் ரூபா 2 மில்லியன் வீதம் நட்டஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக நிலுவைச் சம்பளம் செலுத்துதல் மற்றும் வைத்திய சபை கலைக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற நியமனங்கள் மற்றும் பதிவுகளை நீக்குமாறு கோரி இரண்டு வைத்தியர்களினால் சபைக்கு எதிராக 02 வழங்குகள் தொடரப்பட்டிருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

ஹோதியோபதி வைத்திய தொழிலில் ஈடுபடுவதை மேம்படுத்துதல், தைரியமூட்டுதல் மற்றும் முறைமைப்படுத்தல், ஹோமியோபதி வைத்திய முறைமை தொடர்பான ஆராய்ச்சிகளும் மேம்படுத்தலும், மருந்து வகைகள் மற்றும் ஏனைய தயாரித்தல் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தலை முறைமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய திட்டத்தில் உள்ளடக்கி மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது சபையின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 இன் 10 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரகாரம், ஹோமியோபதி வைத்தியசாலைகளைப் பதிவு செய்வதற்கு 2016 நவம்பர் 04 ஆந் திகதி நடைபெற்ற இடைக்கால வைத்திய சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நடாத்தப்படுகின்ற 07 சிகிச்சை நிலையங்களில் 04 சிகிச்சை நிலையங்களுக்காக நோயாளிகள் வருகை தருதல் குறைவடைந்திருந்ததுடன் அக்குறைவை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 4 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையிலான வீழ்ச்சி காணப்பட்டது. 03 சிகிச்சை நிலையங்களில் நோயாளிகளின் வருகை அதிகரித்திருந்ததுடன் அவ்வதிகரிப்பை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 06 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறு இருந்தன.

(i) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஹோமியோபதி சுகாதார சேவை வங்குகின்ற நிறுவனங்களை பதிவு செய்வதற்கும் அரசாங்கத்தின் ஹோதியோபதி வைத்தியக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்கும் தேவையான பிரமாணங்களை வெளியிடல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களை வெளியிட்டு பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கட்டளை மற்றும் 3 விதிகளை வரைபு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பரீட்செயொன்றை நடாத்தி வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கு திட்டமிடப்பட்டு பரீட்சையை நடாத்துவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், பரீட்சை நடாத்தப்பட்டிராததுடன் வைத்தியர்களைப் பதிவு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் போது ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்து பகிந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மருந்துகளை இறக்குமதி செய்யும் 07 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற இடைக்கால வைத்திய சபையினால் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட பாடநெறியொன்றுக்கான கட்டணமாக அறவிடப்பட்ட பணம் தனியார் வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கின் மீதி ரூபா 1,702,684 ஆக இருந்தது. திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பாடநெறி நடாத்தப்படாதிருந்ததுடன் அப்பணத்தை வைப்பாளர்களுக்கே மீளச் செலுத்த வேண்டியதாக இடைக்கால வைத்திய சபை தீர்மானித்திருந்த போதிலும், வைப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அறவிடப்பட்ட பணம் எவ்வளவு என்பது தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை.

(ஆ) 2016 இன் 10 ஆம் இலக்க ஹொமியோபதி அதிகாரச்சட்டத்தின் 51(2) பிரிவின் பிரகாரம் அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால வைத்திய சபை இந்த அதிகாரச்சட்டம் அமுல்படுத்தப்படும் திகதி முதல் இரண்டு வருடங்களில் சபை தாபிக்கப்படும் வரை சபையின் பணிகளை நிறைவேற்றவேண்டியிருந்தது. எனினும், அதிகாரச்சட்டத்தின் 51(3) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் இடைக்கால வைத்திய சபை நியமிக்கப்பட வேண்டியது குறித்த தினம் ஆரம்பிக்கின்ற மூன்று மாத காலத்திற்காகும். அதன் பிரகாரம் இடைக்கால வைத்திய சபையின் செல்லுபடிக்காலம் தொடர்பாக அதிகாரச்சட்டத்தில் ஒவ்வொரு பிரிவுகளினதும்

இணங்காமைகளைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

ஹோமியோபதி வைத்தியர்களை பதிவு செய்யும் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த 08 வைத்தியர்களின் பெயர் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பொதுமக்களின் நிதியினைச் சேகரிப்பதற்கான அதிகாரத்தைப் பெற்ற எந்தவொரு ஏற்பாடு இன்றியும், முறையான அங்கீகாரமின்றியும் "ஹோமியோபதி நிதியம்" என்ற பெயரில் ரூபா 50 பெறுமதியுடைய 100 நிதி உதவிப் பத்திரங்கள் அடங்கிய நிதிஉதவிப் பத்திர புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன், அச்சிடப்பட்ட மொத்த நிதிஉதவிப் பத்திரங்களின் எண்ணிக்கை, அச்சிடப்பட்ட வருடம், நிதி உதவிப் பத்திர விற்பனை வருமானம் மற்றும் பணத்தை வங்கியிடல் தொடர்பான தகவல்கள் எதுவும் சபையிடம் காணப்படவில்லை. 2018 ஏப்ரல் 26 ஆந் திகதி வரையிலும் அதில் 417 புத்தகங்களின் இருப்பொன்று எஞ்சியிருந்தது. காணப்பட்ட ஆகக்குறைந்த புத்தகத்தின் இலக்கத்திற்கும் ஆகக்கூடிய புத்தகத்தின் இலக்கத்திற்கும் இடையே 162 புத்தகங்களின் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதன் மூலம் சேகரிக்கக் கூடியதாக இருந்த மொத்தப் பணம் ரூபா 810,000 ஆகும்.

4.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ஹோமியோபதி வைத்தியக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் கற்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான கட்டமைப்பை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் கற்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,199,254 கிரயமான நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடம் என்பன 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 20(2) மற்றும் 20(3) ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரி செயலாளரினதும் சபையினதும் விருப்பத்தின் பிரகாரம் அமைச்சின் உதவிச் செயலாளரொருவர் தற்காலிகமாக சபையின் பதிவாளராக நியமிக்கப்பட வேண்டுமாக இருந்த போதிலும், இடைக்கால நிர்வாக சபையினால் அமைச்சிற்கு வெளியேயுள்ள ஒருவர் 03 வருட தகுதிகாண் காலத்தின் கீழ் 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதி பதிவாளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) மருந்து கலவையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் நடைமுறையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம், சேவையில் நிரந்தரமாக்குவதற்காக பதவிக்கு நியமிக்கப்பட்டு 03 வருடங்கள் கழிவற்கு முன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டியிருந்த போதிலும், 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி முதல் நிரந்தர அடிப்படையில் சேர்க்கப்பட்ட 07 மருந்து கலவையாளர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்காக உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையை நடாத்துவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக வைத்திய சலையினால் தெளிவுபடுத்தப்படாமையின் காரணமாக அதன் பணிகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய இடங்களினது இலக்குகளின் அடிப்படையில் அடைவுகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் சபைக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காததுடன் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக சபையின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட பாதீடொன்றைத் தயாரித்து அதனை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. கீழே காண்பிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக முகாமைத்துவம் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ) கணக்கீடு	சகல சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளடக்கிய பேரேட்டுக் கணக்குகள் பேணிச் செல்லப்படாமை மற்றும் சீராக்கங்களுக்கான நாட்குறிப்புப் பதிவுகள் பதியப்படாமை

(ஆ)	நுகர்வுப் பொருள் இருப்புக் கட்டுப்பாடு	மருந்து கொள்கலன் டப்பி மற்றும் உறைகளின் இருப்பு பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமை மற்றும் அந்த இருப்புக்கள் தொடர்பாக சரியான கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்படாமை
(இ)	பதவியணியினர் நிர்வாகம்	அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் ஹோமியோபதி வைத்திய விடயங்களுக்குள்ளான பதவியணியினர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமை

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி